N. Asokan
Secretary & Senior Research Fellow

No.5. Kavignar Puduvai Sivam St
Venkata Nagar Extension
Pondicherry 605 011 INDIA
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax:(413)2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

# The Mother's Service Society

05 / 05 / 2014

## அமெரிக்க வாழ்வின் நிறைவுகளும் குறைபாடுகளும்

இன்று உலகளவில் அமெரிக்க மோகம் பரவியுள்ளது . அதுவும் குறிப்பாக இந்தியாவில் அதிகமாகவே உள்ளது . இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் இந்தியர்கள் ஆங்கிலேயர்களை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள் . அதாவது மேடைப்பேச்சு என்று வந்தால் , ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள் . பேண்ட்டோடு கோட் போட்டுகொண்டு இருப்பதை கௌரவமாகக் கருதினார்கள். காலை வணக்கம் சொல்வதைக்கூட good morning என்றுதான் சொல்வார்கள். பெரியவர்களை Sir என்றும், பெண்களை madam என்றும் அழைத்துக் கொண்டு இருந்தார்கள் . இரண்டாம் உலகப்போருக்குபின் சில ஆங்கில பழக்கவழக்கங்கள் குறைந்து, அமெரிக்க பழக்கவழக்கங்களுக்கு மாறிவிட்டார்கள். Hello-விற்கு பதிலாக, Hei வந்து விட்டது. கோட், சூட் போய் ஜீன்ஸ் மற்றும் T Shrit வந்து விட்டது. அமெரிக்க பாணியில் I. T. கம்பெனிகளில் எல்லாம் Boss-யே பெயர் சொல்லி அழைக்கின்றனர் . இப்படி பேச்சில், பழக்கவழக்கங்களில் அமெரிக்க பாணி வெளிப்படுவதோடு மட்டுமல்லாமல் , வாழ்க்கையில் மற்ற பல இடங்களில் அமெரிக்க தாக்கம் நன்றாகவே தெரிகிறது கல்யாண மார்க்கெட்டில் அமெரிக்க I.T. கம்பெனிகளில் வேலை செய்யும் வரன்களுக்குதான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது . அவர்களுக்குமுன், மற்ற வரன்கள் எடுபடாமல் போகிறது. 1990-க்கு முன்னால், ஊரில் ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்களில் இருந்துதான் பிள்ளைகளே அமெரிக்காவிற்க்குப் போயிருப்பார்கள் . ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது . ஏகப்பட்ட நடுத்தர குடும்பத்துப் பிள்ளைகளே அமெரிக்காவில் படிக்கிறார்கள், அமெரிக்காவில் வேலை செய்கிறார்கள் . அல்லது அமெரிக்காவிலேயே settle-ஆகி விட்டார்கள் என்ற பேச்சு அடிபடுகிறது . விசா கட்டுப்பாடு என்ற ஒன்று மட்டும் இல்லை என்றால் , அதாவது யார் வேண்டுமானாலும் அமெரிக்காவில் settle-ஆகி விடலாம் என்று இருந்தால் , இன்று குக்கிராமங்களில் இருப்பவர்கள்கூட வீடு, நிலத்தை எல்லாம் விற்று , flight ticket வாங்கிக் கொண்டு அமெரிக்கா சென்று settle-ஆகி விடுவார்கள் போலிருக்கிறது

இந்த அளவிற்கு அமெரிக்க மோகம் பரவி இருப்பதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். மேற்பார்வையாகப் பார்த்தால், அமெரிக்கா பணக்கார நாடு. அதனால் அங்கு சென்று குடியேற எல்லோரும் பிரியப்படுகிறார்கள் என்று புரிந்து கொள்ளலாம். நாம் அதோடு நிறுத்திக் கொள்ள முடியாது. இந்த சுபிட்சத்திற்கு பின்னாலுள்ள காரணங்களை நாம் ஆராய்ந்து அறிய வேண்டும் . அது தெரிய வரும்போது, நம் நாட்டு மக்கள ஏன் அதுபோலில்லை என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும் . தூரத்திலிருந்து பார்க்கும்போது அமெரிக்கா குறையே இல்லாத நாடாக நமக்குத் தெரிகிறது . அப்படியே அங்கு நடக்கும், கெட்ட விஷயங்களைப்பற்றி நாம் செய்தித்தாளில் படித்தாலோ , நாம் அதை எல்லாம்

பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. பெரிய மனிதனின் குறைகள் நம் கண்ணில் படாததுபோல, பணக்கார நாடுகளின் குறைகள் எல்லாம் நம் மனதில் படுவதில்லை என்றும் சொல்லலாம் . இப்படி மோகத்தால் பீடிக்கப்படாமல், நடுநிலைமையில் இருந்து கொண்டு ஆராய்ச்சி செய்பவருக்கு அமெரிக்காவின் நிறைகளும், குறைகளும் கண்ணில்படும். அப்படி நம் கண்களில்படுகின்ற ஒரு சில விஷயங்களை நாம் இப்போது பட்டியலிட்டுப் பார்க்கலாம்

1. <u>அமெரிக்கா பணக்கார, சுதந்திரமான நாடு :</u> முதலில் நம் கண்ணில்படுவது இந்நாடு பணக்கார நாடு என்பதாகும். பொதுவாக எந்த நாட்டிலும் பணக்காரர்கள் குறைவாகவும், ஏழைகள் அதிகமாகவும்தான் இருப்பார்கள். ஆனால் இவ்விஷயத்தில் இந்த நாடு வித்தியாசமாக உள்ளது அதாவது இந்நாட்டிலொரு 10% பெரும் பணக்காரர்களாகவும் மற்றும் 10% வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாகவும் மீதமுள்ள 80% இந்த இரண்டு வகுப்பிலும் சேராத நடுத்தர வர்கத்தை சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள் இப்படி ஓர் பெரிய நடுத்தர வர்கத்தை உருவாக்கியதுதான் இது ஒரு பணக்கார நாடாக காட்சி அளிப்பதற்கே காரணமாக அமைந்துள்ளது . 10% பெரும் பணக்காரர்கள் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன் . அவர்களுடைய வாழ்க்கை, வசதிகள் என்பது நாம் கற்பனையே செய்ய முடியாத அளவிற்கு அமைந்துள்ளது. ஒரு கோடி டாலர்கள் சொத்து மதிப்புள்ளவர்கள் இந்த பணக்கார பட்டியலில் அடங்குவார்கள். ஒரு கோடி டாலர் என்றால் இந்திய ரூபாயில் 60 கோடி ரூபாய் என்று கணக்கு வருகிறது. தொழிலதிபர்கள், கம்பெனி CEO-க்கள், மற்றும் பிரபலமான Lawyers, Doctors, Auditors, திரைப்பட கலைஞர்கள் போன்றவர்கள் வருவார்கள் . இவர்களுடைய வீடுகள் எல்லாம் பிரம்மாண்டமான அளவில் இருக்கும். நம் நாட்டில் வீட்டில் அனைவரும் இருசக்கர வாகனம் வைத்துள்ளதுபோல் அவர்கள் அனைவரும் வீட்டில் எத்தனை பேர்கள் உள்ளனரோ அத்தனை கார்கள் வைத்திருப்பார்கள். குட்டி விமானங்களை வைத்துக் கொண்டு இங்கும் , அங்கும் போவதெல்லாம் இவர்களுக்கு சகஜம். இவர்களுடைய பிள்ளைகளை எடுத்துக் கொண்டால், நம்முடைய பெற்றோர்கள்தான் பெரும் பணக்காரர்கள் ஆயிற்றே நாம் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்று இவர்கள் வாழ்க்கையை சுலபமாக எடுத்துக் கொள்வதில்லை . பெரும் பணக்காரர்கள் வீட்டு பிள்ளைகள்கூட 14, 15 வயது ஆகிவிட்டது என்றால் பாக்கெட் செலவிற்காக நியூஸ் பேப்பர் போடுவது ஹோட்டலில் சர்வர் வேலை செய்வது, பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடுவது என்றிந்த மாதிரியான வேலைகள் எல்லாம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். நம் நாட்டில் ஒரு பணக்கார வீட்டுபி ள்ளை இம்மாதிரியான வேலைகளை எல்லாம் செய்தால், பெற்றோர்கள் அதை மிகவும் கௌரவக் குறைவாக நினைப்பார்கள் . ஆனால் அங்கேயோ இத்தகைய வேலைகளை பெற்றோர்களே வரவேற்கிறார்கள் . நம் நாட்டில் பெரும் பணக்காரன் இருந்தால், அவர் சொத்து முழுவதையும் தனக்கு எழுதி வைப்பார் என்று பிள்ளைகள் எதிர்பார்ப்பார்கள் இந்த எதிர்பார்ப்பு இளைய தலைமுறைக்கு இருக்கும் . அப்படி எழுதி வைக்காவிட்டால் பெரிய தகராறு, சண்டைகள் எல்லாம் வரும். ஆனால் அங்கு இப்படியெல்லாம் இல்லை. பெற்றோர்கள் அவர்கள் சொந்த முயற்சியில் சம்பாதித்த சொத்து என்று தெரிந்தால் , அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை வாங்கிக் கொள்ளும் பக்குவத்தைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்கிறார்கள். உதாரணமாக பில்கேட்ஸ் அவர்களை எடுத்துக் கொண்டால் அவருக்கு ஐம்பது பில்லியன் டாலர் சொத்து இருப்பதாக சொல்கிறார்கள் இந்திய ரூபாயில் அவருடைய சொத்து மதிப்பு மூன்று லட்சம் கோடி. அவரை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபோது அவர் தன்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் ஆளுக்கு 200 மில்லியன் டாலர்தான் தருவதாக இருக்கிறேன். அதற்குமேல் கொடுத்தால் அவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று சொன்னாராம் . ஐம்பது பில்லியன் என்றால் ஐம்பதாயிரம் மில்லியனாகிறது. இந்த ஐம்பதாயிரம் மில்லியனில் அவர் பிள்ளைகளுக்கு கொடுக்க விரும்புவது வெறும் அறுநூறு மில்லியன்தான் . அதாவது 1 ¼ %-க்கும் குறைவாகத்தான் வருகிறது .

ஆனால் அவருடைய பிள்ளைகள் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். நம் நாட்டு கோடிஸ்வர பிள்ளைகள் இதை ஏற்பார்களா எனபது சந்தேகம்

அமெரிக்காவில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் 10% பேர்கள் இருக்கிறார்கள். இவர்களையும் நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்களையும் சமமாக நாம் கருத முடியாது . அங்கே வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்கள்கூட கார் , டி.வி., பிரிட்ஜ் என்ற எல்லா வசதிகளுடன்தான் இருப்பார்கள். இங்கே அரசாங்கம் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுப்பதுபோல் அங்கேயும் அரசிடமிருந்து welfar assistance என்று மாதமாதம் கிடைக்கும் . இந்திய ஏழைக்கும், அமெரிக்க ஏழைக்கும் வித்தியாசம் என்னவென்றால் , நம் நாட்டு ஏழைகள் அரசாங்க உதவியே போதும் என்று திருப்தி அடைந்துவிடுகிறார்கள் . அதற்குமேல் தான் வாழ்க்கையில் உயரவேண்டும் என்று சொந்த முயற்சி எதுவும் எடுப்பதில்லை . ஆனால் அமெரிக்க நாட்டு ஏழைகள் அப்படி அரசாங்க தயவிலிருப்பதை மிகவும் அகௌரவமாகக் கருதுகிறார்கள் . அப்படி கருதுவது அதிர்ஷ்டத்திற்கு ஒரு வகையில் ஆதரவாக அமைகிறது . அடுத்ததாக அமெரிக்க முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் சுதந்திரமான சூழ்நிலை ஒரு முக்கிய காரணமாகும். மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற வித்தியாசங்கள் அங்கு இல்லை. ஏனென்றால் ஜாதி அமைப்பே அங்கு இல்லை. 1960-வரை கறுப்பின மக்கள் குறைவாக நடத்தப்பட்டார்கள். ஆனால் அதன்பின் அந்த பாகுபாடும் போய்விட்டது. இப்போது வெள்ளையர்களுக்கு சமமாகவே நீக்ரோ மக்களும் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். பெண்களுக்கு இந்திய சமுதாயம் பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. உதாரணமாக கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும், அடுத்ததாக மாமியாருக்கு அடங்கியிருக்க வேண்டும், பெரியதாக சாதிக்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படக் கூடாது. இத்தகைய கட்டுப்பாடுகள் எல்லாம் பெண்களுக்கு அங்கே இல்லை. கூட்டுக் குடும்ப வாழ்க்கையே மிகவும் அரிதான ஒரு விஷயமாக இருப்பதால், மாமியாருடன் மருமகள் சேர்ந்து ஒரே வீட்டில் இருக்க வேண்டிய அவசியமே வருவதில்லை.

அடுத்ததாக அமெரிக்கக் கல்விமுறை சுதந்திரத்தை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளது. நம் நாட்டில் மாணவன் ஆசிரியரை கேள்விக் கேட்டாலே அவர் கோபப்படுவார். அதுவும் அவர் சொல்வதற்கு மாற்று கருத்தை மாணவன் வெளியிட்டால் ஆசிரியருக்கு இன்னும் கோபம் அதிகமாகும். ஆனால் அங்கே ஆசிரியரே மாணவனை ஏதேனும் கேள்விகள் உண்டா என்று கேட்கத் தூண்டுவார். மாற்றுக் கருத்து யாரேனும் வைத்திருந்தால் அதை வெளியிடலாம் என்று வெளிப்படையாகவேக் கேட்பார். இப்படிப்பட்ட சுதந்திரமான சூழ்நிலையில் படிக்கும் மாணவர்கள் creativecreative-வாக சிந்தனை செய்ய கற்றுக் கொள்கிறார்கள். அது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. பெரிய American CorporationAmerica Corporation-களில் கீழ்மட்டத்தில் வேலையில் சேர்பவர்கள்கூட மேல்மட்டத்திற்குயர கம்பெனி பாலிசியே ஆதரவு தருகிறது. இதே இந்தியாவில் ஒரு கம்பெனியில் கீழ்மட்டத்தில் ஒருவர் வேலையில் சேர்ந்து மேலே முன்னுக்குவர முயன்றால், போட்டி, பொறாமை என்று எத்தனையோ தடைகள் எழும்பி வரும். அதையெல்லாம் முறியடித்து அவர் மேலே வருவதற்குள் அவர் ரிடையராகும் வயதே வந்துவிடும். அமெரிக்காவில் நிறைய பேர்கள் சுலபமாக பணம் சம்பதிப்பதற்குக் காரணமே அங்கு நிலவும் சுதந்திரமான சூழ்நிலைதான். இங்கே புதியதாக ஒரு கம்பெனி ஆரம்பிக்க வேண்டும் என்றால் , ஏகப்பட்ட அரசாங்க விதிமுறைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதையெல்லாம் பூர்த்தி செய்து கம்பெனி ஆரம்பிப்பதற்குமுன் தொழிலதிபர் துவண்டே போய்விடுகிறார் . அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் சிலிக்கான் valley என்றொரு கம்யூட்டர் சிட்டியுள்ளது . புதிய கம்பெனியை ஆரம்பிப்பவர்கள் எல்லாம் அங்கேதான் ஆரம்பிக்கிறார்கள். நம் நாட்டில் நிலவும் கெடுபிடிகள் எல்லாம் அங்கேயும் இருந்தால் இவ்வளவு அசுர வேகத்தில் அங்குn Vசிலிக்கான்alley வளர்ந்திருக்க முடியாது. சிலிக்கான் valleyValley செயல்பட்டுக் கொண்டிருப்பதால்தான் ஆப்பிள் கம்பெனி உலகிலேயே முதன்மையான கம்பெனியாக

தலையெடுத்துள்ளது. இவ்வாறு படிப்பில் சுதந்திரம், வேலையில் சுதந்திரம் என்று இரண்டு சுதந்திரமும் சேர்ந்து அமெரிக்காவை மிகவும் முன்னேறிய நாடாக மாற்றிவிட்டது.

2. **அமெரிக்கர்கள் புது idea-க்களுக்கு மிகவும் receptive receptive-வாக இருப்பார்கள்** அமெரிக்க மக்கள் புது ideaidea-க்களை மறுக்கவோ, உதாசீனப்படுத்தவோ மாட்டார்கள். நம் நாட்டில் புதுidea idea ஐடியாக்களுக்கு வரவேற்பே இருப்பதில்லை. யாரேனும் புதிய கருத்து ஒன்றை தெரிவித்தால், அவர்கள்மேல் நமக்கு எரிச்சல்தான் வருகிறது. உதாரணமாக 1970-ஆம் ஆண்டில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தனியார் வங்கிகளை தேசிய மையமாக்கலாம் என்று கருத்துத் தெரிவித்த பொழுது, நாடு முழுவதும் அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. இதெல்லாம் நடக்கிற காரியமில்லை. தேசிய மையமாக்கினால் அவ்வங்கிகள் எல்லாம் படுத்துவிடும், depositsdeposits எல்லாம் குறைந்துவிடும் என்று அவநம்பிக்கையை எழுப்பினார்கள். ஆனால் இந்திராகாந்தி அவர்கள் எல்லா எதிர்ப்புகளையும்மீறி எல்லா வங்கிகளையும் அரசுடமையாக்கினார். அப்படி அவர் செய்தது நாளடைவில் நாட்டிற்கு நல்லது என்று நிரூபணமாகியது, deposits எல்லாம் குறைந்துவிடும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக எல்லாம் பல மடங்கு பெருகி லட்சகணக்கான கோடிகளில் deposits குவிந்திருக்கிறது.

மக்களுடைய எதிர்ப்பிற்கு பயந்து இந்திரா அவர்கள் பின்வாங்கியிருந்தால், நாட்டின் முன்னேற்றம் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கும். நம் நாட்டில் பெரிய பட்டம் வாங்கியவர்கள் தம்மைவிட குறைந்த பட்டம் வாங்கியவர்களிடம் கற்றுக்கொள்ள விஷயம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டியைசேர்ந்த ஓர் அன்பரிடம்Ameri American Management Association -உடையVice PrisidentVice President -ஆக செயல்பட்டவர் SocietyManagement-இல் மேனேஜ்மெண்ட் துறையில் ஆன்மீக அணுகுமுறைகள் என்றொரு புதிய விஷயம் இருக்கிறது என்று கேள்விப்பட்டு, அதைபற்றி தெரிந்துகொள்ள இந்தியாவிற்கே கிளம்பி வந்துவிட்டார். இத்தனைக்கும் சொசைட்டியில் இருந்த அன்பரோ Management Management நிபுணருடைய படிப்பைவிட குறைந்த படிப்பைத்தான் படித்தவர். அது தெரிந்தும்கூட இந்த அமெரிக்க நிபுணர் அதைப் பெரிதுபடுத்தாமல், இவருடைய கல்வித்தகுதி எனக்கொரு பொருட்டில்லை. இவரிடம் விஷயம் இருக்கிறது என்று எனக்குப் புரிகிறது. அதைநாடியே நான் இங்கு வந்துள்ளேன் என்று பெருந்தன்மையாக பதிலளித்தார். 1970-ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே இந்திய ஆன்மீகத்தில் தாங்கள் தேடிக் கொண்டிருக்கிற உண்மைகளும் விடைகளும் இருக்கின்றன என்று புரிந்துகொண்ட ஏராளமான அமெரிக்க இளைஞர்கள் இந்திய குருமார்களின் ஆசிரமங்களை நோக்கி வருகிறார்கள். இது நிச்சயம் அவர்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. ஆப்பிள் computer நிறுவனத்தின் ஸ்தாபகர் Steev Jobஅவர்கள் இப்படி ஆன்மீகத்தைத் தேடி இந்தியாவிற்கு வந்தவர்தான். புத்த மதத்தின் அணுகுமுறைகளால் ஈர்க்கப்பட்டு, பௌத்த முறைகளை பின்பற்றி, எப்படி intution உள் எழுச்சி (inspiration) அடைவது என்று கண்டறிந்தார். இந்த intution காரணமாகத்தான் வாடிக்கையாளர்களின் மனதை கவரும் வகையில் புதுப்புது IPad டிசைன்கள் உருவாக்குவது எப்படி என்றெல்லாம் கண்டுபிடித்தார். இந்திய கம்பெனிகளில் மேல்நிலையில் இருப்பவர்கள் எவருமே தனக்கு கீழ்நிலையில் இருப்பவர்கள் கம்பெனி வளர்ச்சிக்கு ஒரு நல்ல யோசனை கூறினாலும், உன்னிடம் கேட்டுக் கொள்வது எனக்கு கௌரவமாக இல்லை என்று சொல்லி தட்டிக் கழித்து விடுவார்கள். இதனாலேயே கீழ்நிலையில் உள்ளவர் எவரும் மேலே உள்ளவர்களுக்கு எந்த புதிய யோசனையும் வழங்குவதில்லை. அப்பா அவர்கள் ஆரம்ப காலத்தில் ஆசிரியர் பணியிலிருந்தார். அப்போது அவர் தன்னுடைய தலைமை ஆசிரியரை அணுகி நீங்கள் நிறைய நெல் வயல் வைத்திருக்கிறீர்கள். வயலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தென்னை கன்றுகளை நட்டு வைத்தீர்கள் என்றால், அவை வளர்ந்து, நன்றாகக் காய்த்து, அதன் மூலம் உங்களுக்கு உபரி வருமானம் கிடைக்கும்என்று சொன்னார். தலைமை ஆசிரியரோ "இது நல்ல யோசனையாக இருந்தாலும், என்னிடம் வேலை பார்க்கும் ஆசிரியர் நீங்கள், அதனால் இந்த

கருத்தை ஏற்று செயல்படுவதற்கில்லை" என்று பதிலளித்தார் . அப்பா அவர்கள் அதிர்ச்சியடைந்து, அதிர்ஷ்டத்திற்கு ஒருவர் வழிகாட்டினாலும், இப்படி கௌரவப் பிரச்சனையால், இந்த வருமானம் வேண்டாம் என்கிறாரே இது என்ன விந்தையாகயிருக்கிறது என்று வியந்தார்.

நமக்குத் தெரிந்ததைத் தவிர வேறு உண்மை இருக்கலாம் என்பதை புரிந்துக் கொள்வதே நமக்குக் கடினம். ஆனால் அமெரிக்கர்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளனர். அவர்களிடம் ஒரு தீராத பிரச்சனையைக் கொண்டு வந்தால், இதற்கு தீர்வே இல்லை என்ற இந்தியர்களின் முடிவை அவர்கள் ஏற்க மாட்டார்கள். இப்போதைக்கு நம் கண்களுக்குத் தீர்வு இல்லை என்று தெரிகிறது. ஆனால், தொடர்ந்து முயற்சி செய்தோமென்றால், இதுவரை நம் கண்களுக்குப் புலப்படாத தீர்வு ஒன்று நம்மறிவிற்குப் புலப்படும். ஆகவே அதுவரையில் நம் முயற்சியை தளரவிடக் கூடாது என்பார்கள். நம் நாட்டவர்களுக்கு கர்மத்தின்மேல் நம்பிக்கை இருப்பதால், ஒரு பிரச்சனையை நம்மால் தீர்க்க முடியவில்லை என்றால், அதெல்லாம் கர்மபலன் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று கையை விரித்து விடுகிறோம். செவிடாகப் பிறக்கும் குழந்தைகள் சரியாகப் படிப்பதில்லை என்றால், அதை கர்மபலன் என்று இந்திய பெற்றோர்கள் கை விட்டுவிடுகிறார்கள். ஆனால், சென்ற நூற்றாண்டில்கூட செவிடான பிள்ளைகளுக்கு படிப்பு வரவில்லை என்றால், அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய சைகை பாஷை ஒன்றை உருவாக்கி அதன்மூலம் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கும் கல்வியறிவை வழங்க ஏற்பாடு செய்தார்கள். இப்படி எந்தவிதமான பிரச்சனைக்கும் தீர்வுண்டு என்ற நம்பிக்கை **infinity**-யை அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள் என்று காட்டுகிறது. ஒரு விஷயம் **Finite**-ஆக இருக்கும்போது அதற்கொரு எல்லையுண்டு. முடிவுண்டு. அதற்குமேல் நாம் ஒன்றும் செய்ய முடியாதென்று ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒரு விஷயம் **infinite**-ஆக இருக்கும்போது, அதற்கு வரம்போ, முடிவோ இல்லை என்றாகிறது. அப்பட்சத்தில் நாம் இதுவரை பார்த்திராத அம்சங்கள் திடீரென வெளிப்பட்டு, அது ஒரு நல்ல தீர்வாகவும் அமையும். உதாரணமாக சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரியம்மைக்கு தீர்வே கிடையாது. அது வந்தால், அனுபவிக்க வேண்டியதுதான். மாரியம்மன் கோபத்திலிருந்து மனிதன் தப்பிக்க முடியாது என்றெல்லாம் பேசினார்கள். மேற்கத்திய நாட்டவர்கள் இதை ஏற்றுக் கொள்ளவே இல்லை. மற்ற வியாதிகளைபோல் இதுவும் ஒரு வியாதிதான். முயற்சி செய்தால் குணப்படுத்தலாம் என்று முடிவு செய்தார்கள். அவர்கள் முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்து, தடுப்பூசியையும் கண்டுபிடித்தார்கள். இதன் விளைவாக இன்று உலகம் முழுவதுமே பெரியம்மை ஒழிக்கப்பட்டுவிட்டது. வாழ்க்கை அறிவிற்குக் கட்டுப்பட்டுள்ளது. அறிவு என்ன முடிவு செய்கிறதோ அதைத்தான் வாழ்க்கை சாதிக்கும். நம்முடைய அறிவு சோம்பல், இயலாமை, கர்மபலன் போன்றவற்றால் நிறைந்துள்ளது. ஆனால் அமெரிக்கர்களுடைய அறிவோ முயற்சி முன்னேற்றம் **dynamism** ஆகியவற்றால் நிறைந்துள்ளது. எங்கு ஒரு எல்லையை அவர்கள் சந்தித்தாலும், அதை தாண்டலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அதுவே நாமாக இருந்தால், அந்த எல்லைக்குள் அடங்கியிருக்க விரும்புகிறோம். இதுவே அவர்களுக்கும் நமக்குமுள்ள பெரிய வித்தியாசம்.

3. புரட்சியும், **Self-realiance**-உம் அமெரிக்க ரத்தத்தில் ஊறியுள்ளன எந்த வேலையாக இருந்தாலும் தானே செய்கின்ற பழக்கமுண்டு: நம் நாட்டில்தான் வீட்டில் ஏதேனும் ரிப்பேர் வேலை என்று வந்து விட்டால், **electrician**-ஐ கூப்பிடுவோம், **plumber** -ஐ கூப்பிடுவோம். அவர்கள் வந்து சரி செய்யும்வரை அந்த வேலைகள் அப்படிய இருக்கும். ஆனால் அமெரிக்கர்கள் இம்மாதிரி நடந்து கொள்வதில்லை. எல்லா வீட்டு ரிப்பேர் வேலைகளையும் அவர்களே செய்ய பழகிக் கொள்கிறார்கள். **Fan** மாட்டுவது, புதிய பல்பு கனக்ஷ்ன் தருவது, புதிய பைப் லைன் இழுப்பது, மீட்டர் சரி செய்வது என்று இம்மாதிரி வேலைகளை அவர்களே செய்யப் பழகிக் கொள்கிறார்கள். இம்மாதிரி வேலைகளை எப்படி செய்ய வேண்டும் என்பதற்கே **"Do it yourself "** என்ற **guideline** புத்தகங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட புத்தகங்கள் இல்லாத

அமெரிக்க வீடுகளே இல்லை என்று நாம் சொல்லலாம். அமெரிக்கர்களுக்கு 1960-ஆம் ஆண்டில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கை சலித்து விட்டது. அக்காலக் கட்டத்தில் பணம் சம்பாதிப்பது ஒன்றுதான் அமெரிக்கக் குடிமகன்களின் லட்சியமாக இருந்தது. பெரிய வீடு கட்டிக் கொள்ள வேண்டும், பெரிய கார்களை வைத்துக் கொள்ள வேண்டும், தாராளமாக செலவு செய்து வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்றுதான் இருந்தார்கள். ஆனால், அந்த காலத்திலிருந்த அமெரிக்க இளைஞர்களுக்கு இதில் எந்த சிறப்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் வேண்டும். பணத்தைவிட சிறந்ததாக ஏதேனுமொன்று இருக்க வேண்டும். அதை மையமாக வைத்து நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து வழக்கமான வாழ்க்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, வித்தியாசமான புது வாழ்க்கையைத் தேடினார்கள். அப்படி தேடிய பொழுதுதான் இந்திய ஆன்மீகத்தில் அவர்கள் தேடியதற்கு விடை இருக்கிறதென்று அறிந்து அந்த ஆன்மீகத்தைத் தேடி இந்தியாவிற்கு ஏரளமாக வந்தனர்.

அப்படி இந்திய ஆன்மீகத்தில் தன்னுடைய தேடுதலுக்கு விடை கிடைக்கும் என்று நம்பி இந்தியாவிற்கு வந்தவர்தான் ஆப்பிள் கம்ப்யூட்டர் நிறுவனரான Steev Jobs. பௌத்த மத தியானத்தில் அவருக்கு ஈடுபாடுண்டு. அவர் தியானத்தின் மூலம் intution-ஐ வளர்த்துக் கொண்டார். மக்களுக்குப் பிடித்த வகையில் ipad மற்றும் Ipod எல்லாம் கண்டுபிடிப்பதற்கு இந்த intution அவருக்கு பெரிதும் உதவியது. இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் உலக பொருளாதாரமே வீழ்ச்சிக் கண்டிருந்தது. எப்படி பொருளாதாரத்தை மீண்டும் சுறுசுறுப்பாக்குவது என்று வழியே தெரியாமல் உலக தலைவர்கள் திணறிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில்தான் ஆங்கில பொருளாதார நிபுணர்A. M. Keynes என்பவர் பொருளாதார வீழ்ச்சி காலங்களில் அரசாங்கம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது சரியில்லை பொருளாதாரத்தில் தலையிட்டு மக்களுக்கு என்று வேலைவாய்ப்புகளை அரசாங்கமே உருவாக்கித்தர வேண்டும் என்று வாதிட்டார். இந்த கருத்து மிகவும் புரட்சிகரமான கருத்தாக இருந்தது. பொருளாதாரத்தில் தலையிடுவதையே அறியாத அமெரிக்க அரசாங்கத்திற்கு இது பெரிய அதிர்ச்சியாகவே இருந்தது. Keynes அவர்கள் சொல்வது மிகவும் original-ஆன யோசனையாகும். ஒருத்தருடைய originality -யை அதேமாதிரியான originality கொண்ட மற்ற ஒருவரால்தான் பாராட்ட முடியும். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த F. D. Roosevelt அவர்கள் Keynes - ஐ போலவே originality உள்ளவர்கள். ஆகவே இந்த கருத்தை அவர் வரவேற்று ரோடு போடுதல், பாலம் கட்டுதல், காடுகளை அழித்தல், வாய்க்கால் வெட்டுதல் போன்ற பொதுப்பணி வேலைகளை தொடங்கி மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கினார். 1970-இல் பதவி வகித்த ஜனாதிபதி Carter அவர்கள் F D R போலவே originality உள்ளவர். உலக நாடுகளின் பொருளாதார அமைப்புகள் Gold standrad என்பதோடு இணைக்கப்பட்டிருந்தன. இந்த முறையின்படி ஒரு நாட்டின் கரன்சியின் மதிப்பு அந்த தேசத்திலுள்ள Gold reserve -வை ஒத்ததாகும். அதிகமாக reserve வைத்திருந்தால் அதிக மதிப்பும், குறைவாக reserve வைத்திருந்தால் குறைந்த மதிப்பும் கிடைக்கும் என்றாகிவிட்டது. இந்த முறையின்படி பார்க்கும்போது ஒரு நாடு மிகுந்த உற்பத்தி திறனுள்ள நாடாக இருந்தாலும், Gold reserve குறைவாக இருந்தால், அந்நாட்டின் கரன்சியின் மதிப்பு குறைவாகத்தானிருக்கும். உலக பொருளாதார முறையை Gold standrad system சரியாக பிரதிபலிக்கவில்லை. ஆகவே இந்த gns Gold standard- ஐ எடுத்துவிடலாம் என்று ஒரு புரட்சிகரமான முடிவை எடுத்து அமுல்படுத்தியவரே ஜனாதிபதி Carter அவர்கள்தான். இப்படி செய்ததால் உலக நாடுகளின் கரன்சிகள் அந்தந்த நாட்டின் உற்பத்தி திறனைத்தான் பிரதிபலிக்கின்றனவே தவிர, அந்தந்த நாட்டின் Gold reserve- களை இல்லை. இப்படி பலவகைகளில் அமெரிக்கர்கள் தங்கள் originality-யை வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அவர்களை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

4. <u>அமெரிக்கர்கள் செய்வதை பெரிதாகவே செய்வார்கள்:</u> இந்தியா சுதந்திரம் அடைந்தபொழுது நாட்டின் ஜனத்தொகை 30 கோடியாகும். ஆனால் பல்கலைகழகங்கள் வெறும் 27தான் இருந்தன. அதேசமயத்தில் அமெரிக்க ஜனத்தொகை வெறும் 20 கோடியாகவும், ஆனால் பல்கலைகழகங்கள் மட்டும் 800-ஆகவும் இருந்தன. ஒரு பல்கலைகழகத்தில் 8000 முதல் 10000 மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு சராசரி இந்திய பல்கலைகழகத்தில் மாணவர் எண்ணிக்கை 2000 அளவில்தான் இருந்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய பொழுது அமெரிக்க ராணுவத்தில் 16000 வீரர்கள்தான் இருந்தார்கள். ஆனால் போர் சூடுபிடிக்க ஆரம்பித்தவுடன் இந்த 16000 வீரர்கள் எண்ணிக்கையில் 40 லட்சமாக உயர்ந்தார்கள். அதாவது வெறும் ஆறு மாத காலக்கட்டத்திலேயே இராணுவத்தின் வளர்ச்சி 250 மடங்காக அதிகரித்தது. மேலும் மூன்று மாதத்திற்கு ஒரு கப்பல் என்று தயார் செய்து கொண்டிருந்தவர்கள் தங்களுடைய உற்பத்தியின் வேகத்தை அதிகரித்து, ஒரு நாளைக்கு ஒரு கப்பல் என்று delivery செய்ய ஆரம்பித்து விட்டனர். எப்படி அவர்கள் சாதித்தார்கள் என்பது புதிராகவே உள்ளது. 1980-90 போன்ற வருடங்களில் சென்னையிலுள்ள 12 அடுக்குள்ள L. I. C Building- ஐ காணும்போது நமக்கு எல்லாம் மலைப்பாக இருந்தது. ஆனால் அமெரிக்கர்களோ 1940-லேயே 70, 80 அடுக்குகளைக் கொண்ட மாடிக் கட்டடங்களைக் கட்ட ஆரம்பித்து விட்டனர். நம் நாட்டில் பில்லியன் டாலர் கம்பெனிகள் இப்போதுதான் அறிமுகமாகியுள்ளன. ஆனால் அங்கோ 20, 30 வருடங்களுக்கு முன்னாலேயே Ford Company, General Motors, Microsoft, IBM போன்ற பில்லியன் டாலர் கம்பெனிகள் வந்து விட்டன. General Motors company -யின் வருடாந்திர பட்ஜெட் செலவுகள் ஸ்ரீ லங்கா, நேப்பால் போன்ற சிறிய நாடுகளுடைய பட்ஜெட்டைவிட பெரியது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அதாவது அந்த கம்பெனிகள் அந்த நாடுகளை விலைக்கு வாங்கிவிடும் அளவிற்கு வல்லமை படைத்துள்ளது. நம் நாட்டில்தான் 300, 400 ஏக்கர் அளவிலான எஸ்டேட் என்றாலே பிரம்மிப்பாகப் பார்க்கிறோம். இம்மாதிரி பண்ணைகளில் வேலை செய்வதற்கே நமக்கு 40, 50 ஆட்கள் தேவைப்படுகிறது. எஸ்டேட் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டும் என்றால், அதற்கு நாள் முழுவதும் தேவைப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் 10000, 20000 ஏக்கர் அளவிலுள்ள எஸ்டேட்களை சுமார் 10, 20 பேர்கள்தான் நிர்வாகம் செய்கிறார்கள். எஸ்டேட் முழுவதும் drip irrigation முறை சொட்டுநீர் பாசனத்திற்காக பைப்புகளையும் பிளாஸ்டிக் குழாய்களையும் பொறுத்திவிடுகிறார்கள். பம்ப் செட்டை on செய்தவுடன் இந்த குழாய்களின் மூலமாகவே எஸ்டேட் முழுவதுமே நீர் பாய்ச்சப்படுகிறது. 300 ஏக்கர் எஸ்டேட்டை நிர்வாகம் செய்யவே நமக்கு 50 பேர்கள் தேவைப்படும்போது, நியாயமாகப் பார்த்தால், 10000 ஏக்கர் எஸ்டேட்டை நிர்வாகம் செய்ய குறைந்தபட்சம் 1000 பேர்களாவது தேவைப்படும். ஆனால் அமெரிக்கப் பண்ணைகளில் அப்படி செய்வதில்லை. அன்றாட நிவாகத்தை 10,20 பேர்கள்தான் செய்கிறார்கள். அறுவடை நாட்களாக இருந்தால், பெரிய harvester machine வந்துவிடுகிறது. அறுவடையை அவைகள் செய்கின்றன. அதாவது 50 machine-கள் களத்தில் இறங்கினால், அதனை ஓட்டுவதற்கு 50 drivers இருக்கிறார்கள். நம் நாட்டில் சென்னை, பெங்களூர் போன்ற மாநகரங்களில் ஒரு நாளைக்கு 100, 200 விமானங்கள் வந்து இறங்கினாலே பெரிய விஷயமாக இருக்கிறது. ஆனால், Newyork Chicago போன்ற பெரிய நகரங்களில் நிமிடத்திற்கு ஆறு அல்லது ஏழு விமானங்கள் வந்து இறங்குவதாக சொல்கிறார்கள். இந்தியாவில் இன்றைய காலக்கட்டத்தில், ஆயிரம் பேர்களுக்கு 40 கார்கள்தான் உள்ளன. ஆனால் இதுவே நமக்கு கார்களின் எண்ணிக்கை மிகவும் பெருகி விட்டதாகத் தெரிகிறது. ஆனால் அமெரிக்காவிலோ 1000 பேர்களுக்கு 700 கார்கள் உள்ளன. Traffic Jam என்றால், இரண்டு அல்லது மூன்று மைல்கள் தூரத்திற்கு கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக சாலைகளில் நிற்பதைப் பார்க்கலாம். நம்மால் கற்பனை செய்ய முடியாத காரியங்களையும் அவர்கள் சுலபமாக சாதிக்கிறார்கள். 1940-ஆம் ஆண்டளவில் தாழ்வான பகுதியில் கட்டப்பட்ட ஒரு ஹோட்டலையே நாம் காருக்கு jack வைத்துத் தூக்குவதைபோல் அந்த கட்டிடத்திற்குகீழ் jack வைத்து அந்த கட்டிடத்தையே தூக்கினார்கள். இத்தனைக்கும் ஹோட்டல் வழக்கம்போல் இயங்கலாம் என்றும் சொல்லிவிட்டார்கள்.

இப்படிப்பட்ட ஒரு டெக்னாலஜியே நம் நாட்டிற்கு கடந்த ஓரிரு வருடங்களாகத்தான் அறிமுகமாகி உள்ளது. அதாவது 1940-இல் அவர்கள் சாதித்ததை 2014இல்தான் நம்மால் நினைக்கவே முடிகிறது.

5. **அமெரிக்கர்கள் மிகவும் Informal-ஆக இருப்பார்கள்:** இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் formalities மற்றும் பட்டங்கள் எல்லாம் மிகவும் முக்கியம். பிரபு வம்ச குடும்பங்களில் தந்தையாரையே சார் என்றுதான் அழைக்க வேண்டும். தாயாரை Mam என்றுதான் அழைக்க வேண்டும். அங்கே பட்டம், படிப்பு, டிகிரி, டைட்டில் எல்லாம் மிகவும் முக்கியம். இங்கிலாந்து அரசரை your majestiy என்றுதான் அழைக்க வேண்டும் வேறு எந்த மாதிரி யார் அழைத்தாலும் அவர் அங்கிருந்து உடனே வெளியேற்றப்படுவார். Edward VIII என்ற இங்கிலாந்து அரசர் விவாகரத்துப் பெற்ற ஒரு அமெரிக்கப் பெண்மணியை மணந்தார். அதனால் அவர் பதவியை இழக்க வேரிட்டது. பதவி இழந்தபின்கூட அவர் தன் மனைவியை Your Highness என்றுதான் மற்றவர் கூப்பிட வேண்டும் என்று விரும்பினார். முறைகளை இந்தளவிற்கு வலியுறுத்தும் இங்கிலாந்து நாட்டிற்கு வந்த அமெரிக்கர் ஒருவர் இங்கிலாந்து அரசனுடன் விருந்துண்டுவிட்டு, Your Majesty என்று சொல்லாமல் வெறுமனே ஏ! அரசரே உங்களுக்கு நன்றி என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஐரோப்பிய நாடுகளில் பேராசிரியர் பதவி எல்லாம் டாக்டர் பட்டம் வைத்திருப்பவருக்குத்தான் கிடைக்கும். ஆனால் அமெரிக்காவில் P.hd இல்லாதவர்கள்கூட பல்கலைகழகங்களில் அதிபர்களாக பணியாற்றுவதுண்டு. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முறையாக திருமணம் செய்து கொள்ளாமல், ஆணும், பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்துவது அமெரிக்காவில் சர்வ சாதாரணமாக உள்ளது. அதில் ஆச்சரியம் என்னவென்றால் இப்படி குடும்பம் நடத்தும் தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு, முறையாக திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு என்ன மரியாதை கிடைக்கிறதோ அதே மரியாதை கிடைக்கும். 1960-க்குமுன் வெள்ளைக்கார குழந்தைகள் பள்ளிகளில் கறுப்பின குழந்தைகளுடன் சரியாக பழகாமல் தனியே நிற்பார்கள். ஆனால் இதன்பின் இதெல்லாம் மாறிவிட்டது. கலர் வித்தியாசம் தெரியாமலேயே பழகுகிறார்கள். acadamic கருத்தரங்குகளும் மாநாடுகளும் ஐரோப்பாவில் நடைபெற்றால் கலந்து கொள்பவர்கள் கோட், சூட் மற்றும் டை எல்லாம் அணிந்து கொண்டுதான் வர வேண்டும். அது இல்லாமல் வந்தால், கருத்தரங்கில் கலந்து கொள்வது கடினமாகும். ஆனால் அமெரிக்காவில் இதையெல்லாம் எளிமைபடுத்தி விட்டார்கள். ஐரோப்பாவில் கருத்தரங்கில் கலந்து கொள்வதை அமெரிக்காவில் workshop என்று மாற்றி சொல்கிறார்கள். நம் நாட்டில் workshop என்றால் ரிப்பேர் வேலை செய்யும் இடமாகும். ஆனால் அமெரிக்கர்கள் அதற்கான பெயரை கருத்தரங்கிற்கு பயன்படுத்தும் அளவிற்கு informal-ஆக இருக்கிறார்கள்.

நம் நாட்டில் சிறியவர்கள், பெரியவர்களை பெயர் சொல்லி அழைத்தாலே, பெரியவர்கள் அதை மரியாதைக் குறைவாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அங்கே அப்படி எடுத்துக் கொள்வதில்லை. இம்மாதிரியே கணவர்களை மனைவிகள் பெயர் சொல்லி அழைக்கும் பழக்கமும் அங்கே உண்டு. அதை கணவர்களும் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. நம் நாட்டுக் கம்பெனிகளில் மேலதிகாரிகள் ஊழியர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தால், என்ன வேலை நடக்கிறது என்பதைப் பார்க்கத்தான் வருவார்களே தவிர ஊழியர்களோடு சகஜமாக உறவாடமாட்டார்கள். ஆனால் அமெரிக்க கம்பெனிகளில் அவ்வாறு பழகினால்தான் ஊழியர்களை உற்சாகப்படுத்த முடியும் என்று மேலதிகாரிகள் புரிந்து கொண்டுள்ளதால், அந்தஸ்து வித்தியாசமின்றி works spot –க்கு வரும்போது ஊழியர்களிடம் பழகுகிறாகள். அமெரிக்க ஜனாதிபதிகள்கூட சம்பிரதாய முறைகளை எல்லாம் அனுசரிப்பதுண்டு.ஒரு ஜனாதிபதிக்கு பதவி முடிவிற்கு வந்து அடுத்த ஜனாதிபதி பதவி ஏற்கும்போது புதியவர், பழையவருக்கு தேநீர் விருந்து தரும் பழக்கமுண்டு. ஆனால் எல்லா ஜானாதிபதிகளும் இதை கடைபிடித்தார் என்று நாம் சொல்வதற்கில்லை. உதாரணமாக Truman என்ற அதிபர்போய்

Eisenhover என்ற புதிய அதிபர் பதவி ஏற்றார். ஆனால் புதியவர் பழையவருக்கு வழக்கமாக தரும் விருந்து தரவில்லை. நம் நாட்டில் இம்மாதிரியான தவறு நிகழ்ந்திருந்தால், அதையெல்லாம் முதல் பக்கத்தில் பெரிய செய்தியாக வெளியிட்டு இருப்பார்கள். இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் அமெரிக்க அதிபர்கள் வாழ்க்கையில் நடந்துள்ளது. Carter பதவி இழந்து Reagan என்பவர் பதவிக்கு வந்தார். Carter வெள்ளை மாளிகையை காலி செய்வதற்கு இன்னும் பல நாட்கள் இருந்தபோதே Reagan-இன் மனைவி Carter-ரின் மனைவியை அணுகி நீங்கள் இப்பொழுதே காலி செய்தால் தேவலாம் . நான் வெள்ளை மாளிகையை எனக்குப் பிடித்த வகையில் அலங்கரிக்க விரும்புகிறேன் என்று சொன்னாரம். Roosevelt அவர்கள் ஜனாதிபதியாக வெற்றி வாகை சூடியபோது இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அவர்கள் அவருக்கு வாழ்த்து தந்தி அனுப்பினார். வாழ்த்தியதற்கு நன்றி தெரிவித்து பதில் தந்திகூட Ruselweld அவர்கள் அனுப்பவில்லை. இம்மாதிரி ஒரு அலட்சியத்தை எந்த ஆங்கிலேயனாலும் ஏற்கவே முடியாது. முறை என்று பார்த்தால், ஐரோப்பாவில் அவைகளெல்லாம் சட்டம்போல் கருதப்பட்டு கடைபிடிக்கப்- படுகிறது. அந்தளவிற்கு முக்கியத்துவம் முறைகளுக்கு அமெரிக்காவில் வழங்கப்படாதது ஐரோப்பியர்களுக்கு பெரும் குறையாகி விட்டது. Iyyacooa Chrysler Car கம்பெனியில் அதிபராக பதவி ஏற்றபோது கார் விற்பனையை அதிகரிக்க அவரே டி.வி, கார் விளம்பரங்களில் தோன்றி வாடிக்கையாளர்களிடம் ஊக்கப்படுத்தும் வகையில் பேசினார். ஆனால் ஐரோப்பிய கார் கம்பெனிகளின் சேர்மென்கள் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்பே இல்லை. இந்தளவிற்கு அமெரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இடையே வித்தியாசமுள்ளது.

6. <u>அமெரிக்கர்கள் மாற்றத்தை பெரிதும் விரும்புகிறார்கள். ஆனால் மற்ற நாட்டு கலாச்சாரங்கள் சிலவிதமான மாற்றங்களை அனுமதிப்பதேயில்லை:</u> மற்ற நாடுகளில் கருத்தரங்குகள் என்று சொல்வதை எல்லாம் அமெரிக்கர்கள் இதை வொர்க் ஷாப் என்று சொல்லுகிறார்கள். அதையும் இப்பொழுது மாற்றி கருத்துப் பரிமாற்றம் brain storming என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்தில் இதே அமெரிக்கர்கள்தான் பணம், வசதி, மாடர்ன் டெக்னாலஜி என்று பைத்தியமாக இருந்தார்கள். அவர்களே இப்பொழுது பணத்தைத் தேடி அலைவதில் அர்த்தமில்லை. அதைவிட உயர்ந்தது எதையாவது தேடவேண்டும், இந்திய ஆன்மீகத்தில்தான் நாம் தேடுவதற்கெல்லாம் விடையுள்ளது என்று இந்திய குருமார்களை எல்லாம் அமோகமாக வரவேற்கிறார்கள். 1960 வரை அமெரிக்கர்கள், நீக்ரோக்களை தள்ளி வைத்திருந்தார்கள். ஆனால், இன்று அவர்களே ஒரு நீக்ரோவை இரண்டுமுறை அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். எந்தளவிற்கு அமெரிக்கர்கள் மாற்றத்தை வரவேற்கிறார்களோ அந்தளவிற்கு அது அவர்களை ஊக்கப்படுத்துகிறது. ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் எந்தளவிற்கு stability-யை வலியுறுத்துகிறார்களோ அந்தளவிற்கு நமக்கு தெம்பு அதிகரிக்கிறது. குறிப்பாக வேதம் போன்ற புத்தகங்களில் நாம் எந்த மாற்றத்தையும் அனுமதிப்பதே இல்லை. ஸ்ரீ அரவிந்தர் காயத்ரி மந்திரத்தில் சில மாற்றங்களை கொண்டு வந்தார். ஆச்சாரம் மிகுந்தவர்கள் இன்னும் அந்த மாற்றங்களை ஏற்காமல்தான் உள்ளார்கள். 19-ஆம் நூற்றாண்டில் ஒரு ஆங்கிலேய அறிஞர் திருக்குறளில் ஒரு குறிப்பிட்ட குறளில் வார்த்தைகளை மாற்றினால் நன்றாக இருக்கும் என்றொரு கருத்துத் தெரிவித்தார். அதைக் கேட்ட தமிழ் பண்டிதரோ என்ன அபச்சாரம் இது என்று அலறினார். ஆங்கிலேயன் ஆண்டபோது நீதிமன்றங்களில் நீதிபதிகளை Your Honour, Your Lordship என்று விளிப்பதுண்டு. அந்தப் பழக்கத்தையே இன்னமும் மாற்றாமல் நாம் கடைபிடித்துக் கொண்டுதான் உள்ளோம். ஆனால் அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருந்தாலும், Mr. President என்றுதான் எளிமையாக விளிக்கிறார்கள். Your Highness, Your Excellency என்றெல்லாம் விளிப்பதில்லை. சம்பிரதாயத்தை மாற்றுவது பொதுவாக எல்லா கலாச்சாரங்களிலும் எதிர்க்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவை பொறுத்தவரை வலுவான எதிர்ப்பு ஒன்றுமில்லை. ஐரோப்பிய நாடுகளில் வெளியூர் வேலை என்றாலே பொதுவாக கசங்குவார்கள். ஐம்பது மைல்கள் அப்பாலுள்ள ஊர் என்றாலும்கூட

யோசிப்பார்கள். சொந்த ஊர் பற்று அவர்களுக்கு அவ்வளவு அதிகமாக இருக்கும். அமெரிக்காவில் இந்த சொந்த ஊர் பற்று என்பது மிகவும் குறைவு. ஒரு சராசரி அமெரிக்கர் தன்னுடைய வாழ்நாளில் 13 தடவைகள் குடியிருக்கும் ஊரை மாற்றுகிறார் என்று ஆய்வில் கண்டறிந்துள்ளனர். கிழக்கு கடற்கரையில் குடியிருப்பவர்கள் 3000 மைல்களுக்கு அப்பாலுள்ள மேற்கு கடற்கரைக்கு எந்தவித தயக்கமுமில்லாமல் இடம் மாறுவார்கள். ஆனால் நம் நாட்டிலோ டில்லிக்கோ, கல்கத்தாவிற்கோ குடும்பம் இடம் பெயர வேண்டும் என்றால்கூட, அதை ஒரு பெரிய விஷயமாகஎடுத்துக்கொண்டு மிகவும் தயங்குவார்கள். நம் நாட்டில் செய்திதாள்களுக்குகூட ஒரு பாரம்பரியம், சம்பிரதாயமுள்ளது. வழக்கமாக முதல் பக்கத்தில் வருகின்ற செய்திகளை தவிர விளம்பரங்களைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்கே ஆட்சேபணை எல்லாம் வரும். ஆனால் அமெரிக்காவில் செய்தித்தாள்களை அவர்கள் சௌகரியம்போல் design, font என்று எல்லாவற்றையும் மாற்றிக் கொள்கிறார்கள். நாவல்களை சினிமாப் படங்களாக மாற்றும்போது ஐரோப்பாவில் நாவலிலிருப்பதற்கும், சினிமாவில் வருவதற்கும் வித்தியாசமில்லாமல் ஐரோப்பியர்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால், அமெரிக்காவில் திரைப்பட டைரக்டர் தன் இஷ்டம்போல் கதையை திரைப்படத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்வார்.

7. <u>அமெரிக்கர்களின் குடும்ப வாழ்வில் பந்த, பாசங்கள் மிகவும் குறைவு:</u> இதுவரையிலும் அமெரிக்க வாழ்வின் சிறப்புகளை பார்த்தோம். இனி அந்நாட்டு மக்களுடைய வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளைப் பார்ப்போம். முதலில் நமக்கு பளிச்சென்று நினைவிற்கு வருவது அமெரிக்கர்களுடைய குடும்ப வாழ்க்கைத்தான். கணவன் மனைவி என்றால் திருமண நாளிலிருந்து சாகும்வரை பிரியாமல் இருப்பார்கள் என்பதுதான் நாம் கண்டது. ஆனால் அமெரிக்காவில் திருமணங்கள் இவ்வாறு நிலைத்து நிற்பதில்லை. நடக்கும் திருமணங்களில் சரிபாதி 15 வருடங்களுக்குமேல் நீடிப்பதில்லை இருவருக்கும் ஒத்துப்போகவில்லை என்று விவாகரத்தில் முடிகிறது. இப்படி விவாகரத்து செய்வதால், குழந்தைகள் எந்தளவிற்கு பாதிக்கப்படுவார்கள் என்று தாயாரோ, தகப்பனாரோ கருதுவதில்லை. அவரவர் சுதந்திரம்தான் அவரவருக்கு முக்கியமாகி விடுகிறது. பிறந்த நாளிலிருந்தே குழந்தைகளை தனியாகத்தான் படுக்க வைக்கிறார்கள். நம் நாட்டில் தாய்மார்கள் பெற்ற குழந்தையை தம் பக்கத்தில்தான் படுக்க வைப்பார்கள். இதை கேள்விப்படும் அமெரிக்க தாய்மார்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இப்படி பிறந்த நாளிலிருந்தே தனியாக படுக்க வைக்கும்போது தாயாரின் அரவணைப்பு குறைந்து குழந்தைக்கு ஒரு insecurity உண்டாகிறது. இதையெல்லாம் எடுத்துக் கூறினால், அமெரிக்க தாய்மார்கள் கேட்பதேயில்லை. குழந்தை அப்படி தனியாகப் படுத்தால்தான் independent and self reliant -ஆக இருப்பார்கள் என்று வாதம் செய்கிறார்கள். நம் நாட்டில் பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பு செலவு மற்றும் பெண்களின் திருமண செலவு ஆகியவற்றுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறார்கள். மெடிக்கல் காலேஜில் பையனை சேர்க்க நாற்பது, ஐம்பது லட்சம் செலவாகும் என்று தெரிந்தால், அதற்கெல்லாம் பெற்றோர் இங்கே தங்களுக்குள்ள வீடு, நிலம் எல்லாம் விற்பதை பார்க்கின்றோம். ஆனால் அமெரிக்க பெற்றோர்கள் இப்படிபட்ட பெரிய செலவுகள் செய்வதில்லை. பிள்ளைகளே education loan போட்டு அது கிடைத்தால், அதை வைத்துக் கொண்டு அவர்கள் படித்துக் கொள்ள வேண்டியதுதான். மற்றபடி non-professional course -ல் சேருவதாக இருந்தால், பெரும்பாலான பிள்ளைகள் மாலை நேரங்களில் ஹோட்டல் வெய்ட்டர், கடைகளில் சேல்ஸ்மென், பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் போடுபவர், நியூஸ் பேப்பர் போடுபவர் என்று சில்லறை part time வேலைகளில் சேர்ந்து அதில் கிடைக்கும் வருமானத்தை கல்லூரி படிப்பு செலவுகளுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். இப்படி 18 வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி சொந்த காலில் நிற்க வேண்டிய நிலை வரும்போது பிள்ளைகளுக்கு குடும்பப் பாசம் என்பது இல்லாமல் போகிறது. நம் நாட்டில் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் படாதபாடு படுவதாகத் தெரிகிறது. திருமண செல்விற்காக வீட்டையே விற்கும் பெற்றோகள் பலர் உள்ளனர்.

தீபாவளி, பொங்கல் சீர் என்று கூடுதல் சீர் செய்ய பெற்றோர்கள் சிரமப்படுவதை பார்க்கலாம். ஆனால் அமெரிக்கப் பெற்றோர்கள் இப்படி எல்லாம் சிரமப்படுவதே இல்லை. Church-க்கு அழைத்து சென்று திருமணம் செய்து வைத்து, அதிகமாக ஒருlunch வழங்குவார்கள். வசதியான பெற்றோராக இருந்தால், மேற்கொண்டு தன்னுடைய பெண்ணிற்காக நகையெல்லாம் செய்து போடுவார்கள். அவ்வாறு வசதி இல்லாத பெற்றோராக இருந்தால், போடாமலும் விட்டுவிடுவார்கள். அவர்கள் போட்டுதான் ஆகவேண்டும் என்று மணமகன் வீட்டார் கட்டாயப்படுத்த முடியாது. இப்படி பெற்றோர் பிள்ளைகளுக்குப் பெரிதாக ஒன்றும் செய்வதில்லை என்ற நிலை உள்ளபோது, அந்தளவிற்கு அவர்களுக்கு அதிகாரமும் குறைந்து போகிறது. இங்கே கல்யாண செலவிற்கு முழு பொறுப்பு பெற்றோர்கள் ஏற்பதால், மகள் யாரை கல்யாணம் செய்யவேண்டும் என்பதில் முழு அதிகாரத்தை பெற்றோர்களே செலுத்துகிறார்கள். பெற்றோர்களின் அதிகாரத்திற்கும் பெண்களும் பயந்து பெரும்பாலும் பெற்றோர் விருப்பத்தையே பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் நிலைமை வேறுமாதிரியுள்ளது. அங்கே பெண் தனக்கேற்றவரை தானே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்கிறாள். இதனால் வேறு community-யை சேர்ந்த ஆண் மகனை தேர்ந்தெடுத்தாலும், பெற்றோர் பெரிதாக ஆட்சேபணை தெரிவிக்க தகுந்த ஆதாரமில்லாமல் போய்விடுகிறது. எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லலாமே தவிர திருமணத்தை தடுத்து நிறுத்த அவர்களால் முடிவதில்லை. பல ஆண்பிள்ளைகள் அவர்கள் ஒரு பெண்ணை பார்த்து திருமணம் செய்து கொண்டு தந்தையாரை போனில் அழைத்து, Dad நான் திருமணம் செய்துகொண்டு விட்டேன். இதை நான் உங்களுக்கு தெரிவிக்க வேண்டிய கடமை என்பதால் தெரிவிக்கிறேன் என்று சொல்லி விட்டு பதிலுக்கு அவர் என்ன சொல்வார் என்றுகூட காத்திருக்காமல், லைனை கட் பண்ணிவிடுவார்கள்.

ஆக நம் நாட்டில் பெற்றோர்களுக்கு பிள்ளைகள்மேல் பாசமுள்ளது. பாசத்தின் காரணமாக பொறுப்புமுள்ளது. பாசம், பொறுப்பு இரண்டும் அதிகமாக உள்ளதால், பிள்ளைகளின் வாழ்க்கையின் பேரில் அளவுகடந்த அதிகாரமும் வந்துவிடுகிறது. அங்கே பாசம் குறைவு, அதேசமயத்தில் சுதந்திரம் அதிகம். இது நமக்குக் குறையாகத் தெரிகிறது. பாசமும், அதிகாரமும் நிறைந்த இந்திய பெற்றோர் சிறந்தவரா? அல்லது பாசம் குறைந்து, சுதந்திரம் அதிகமளிக்கும் அமெரிக்கப் பெற்றோர் சிறந்தவரா? என்று முடிவு செய்வது கடினம். வயதான பெற்றோர்களை வளர்ந்த பிள்ளைகள் வைத்துப் பார்த்துக்கொள்ளுவது நாம் குடும்ப பாசத்தின் உச்சகட்டமாக எடுத்துக் கொள்கிறோம். சிறந்த குடும்பப் பண்பின் அடையாளமாகவும் நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், அமெரிக்காவில் இதை காண்பதே அரிது. இங்கே வயதானவர்களுக்கு முறையாக பென்ஷன் கிடையாது. Medical Insurance-உம் கிடையாது. அதனால் வயதானவர்களை இளம் பிள்ளைகள் பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அங்கே இப்படியில்லை. வேலை செய்து ஓய்வு பெறுபவர் எல்லோருக்குமேsocial security pension உண்டு. உடம்பிற்கு வந்தால் ஆஸ்பிட்டலுக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். இப்படி வருமானத்திற்கு வருமானம், மருத்துவ சிகிச்சைக்கு Medical Insurance என்றிருக்கும்போது கூடவே மற்றவர்கள் இருந்து பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது. இப்படி பொருளாதார காரணங்களை காட்டி அமெரிக்கர்கள் வயதான பெற்றோர்களைக்கூட வைத்துக் கொள்ள பிரியப்படுவதில்லை. பெற்றோர்களும் பிள்ளைகளின் privacy-யில் குறுக்கிடுவதாக நினைத்து பிள்ளைகளுடன் சென்று வாழ தயக்கம் காட்டுகிறார்கள். பொருளாதார காரணங்கள் ஒருபுறமிருந்தாலும் நம் நாட்டில் அது ஒன்று மட்டுமே காரணம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. வயதானவர்களை, தனிமை வாட்டும். பிள்ளைகள் பேரக்குழந்தைகள் எல்லாம் சேர்ந்திருந்தால்,. இந்த தனிமை உணர்வு வெகுவாகக் குறையும். பேரக்குழந்தைகளும் தாத்தா, பாட்டியின் companionship-ஐ

அனுபவித்து மகிழ்வார்கள். ஆகவே நம் நாட்டில் பொருளாதாரக் காரணங்களைக் காட்டிலும் குடும்பப் பாசம்தான் வயதானவர்களை பிள்ளைகளுடன் தங்க வைக்கிறது என்று நாம் சொல்லலாம்.

அடுத்ததாக குடும்பப் பாசத்திற்கு அடிப்படையாக இருப்பது கணவன் மனைவியிடையே இருக்கும் நெருக்கமான உறவுகள். கணவன் என்று ஒருவன் அமைந்துவிட்டால் கடைசிவரை அவன் தன்னுடன் இருப்பான் என்ற உணர்வு மனைவிக்குக் கிடைத்தால், அந்த பெண்மணி மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறார். இதே உணர்வு கணவனாக இருப்பவருக்கும் கிடைக்கிறது. இந்திய திருமண உறவுகளில் உள்ள இந்த பாதுகாப்பு அமெரிக்க திருமண உறவுகளில் இல்லை. இதற்குக் காரணமும் இருக்கிறது. இந்தியாவில் பெண்கள் கணவருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அவருடைய செயல்பாடுகள் பிடிக்கிறதோ இல்லையோ அவற்றை நாம் ஆட்சேபிக்கக் கூடாது, மறுத்துப் பேசக் கூடாது என்று பெண்டகள் அடங்கிப் போவதால், கணவன் மனைவியிடையே உள்ள சுமுகம் நீடிக்கிறது. தனக்கு பிடிக்காததை கணவன் செய்யும்போது அதைக் கேள்விக் கேட்காமல் மனைவி இருக்கும்போது அந்த இடத்தில் கணவனுடைய பாசம் வலுப்பெறுகிறது. இந்த இடம்தான் அமெரிக்கக் கணவன், மனைவி உறவில் இல்லை. இந்திய பெண்கள்போல் அமெரிக்கப் பெண்கள் கணவர்களுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற இடத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் தங்களை கணவர்களுக்கு சரிசமமாக நினைக்கிறார்கள். அவர் எல்லாவற்றையும் தன்னிடம் சொல்ல வேண்டும், அவர் என்ன செய்கிறார், எங்கே போகிறார், யாருடன் எல்லாம் உறவாடுகிறார் என்று எல்லாம் தனக்கு தெரிந்தாக வேண்டும் என்று நினைக்கிறார். அவர்களுக்குப் பிடிக்காத ஏதேனும் ஒன்றை செய்து விட்டால், கறாராக கேள்வி கேட்பார்கள். வழக்கமாக 8 மணிக்குள் வீட்டிற்கு வருபவர் ஒருநாள் பத்து மணிக்கு வந்தால், பொதுவாக கடன் கொடுக்காதவர் உறவினர்கள் யாருக்காவது கொடுத்தால், மனைவிக்கு பிடிக்காதவர் வீட்டிற்கு வந்தால், அவருக்குப் பிடிக்காத செலவு செய்தால், அமெரிக்க மனைவிகள் உடனே கேள்விகள் கேட்பார்கள். இந்த கேள்விகளுக்கு பதில்கூற கணவர்கள் மறுக்கும்போது அங்கே உறவு கசந்து போகிறது. இப்படி அடுத்தவர்களுக்கு விட்டுக் கொடுக்க முடியாத இடம் திருமண வாழ்வில் வந்துவிடும்பொழுது நாளாவட்டத்தில் உறவு கசந்துபோய் மண வாழ்க்கையில் முறிவு ஏற்பட்டு போகிறது.

இப்படி திருமண உறவு முறிந்துபோகும் குடும்பங்களில் பிறந்து வளர்கின்ற குழந்தைகள் மனநலம் கெட்டு சமூக விரோதிகளாக மாறுகிறார்கள். திருட்டு, கொலை, கொள்ளை என்றிவற்றில் ஈடுபடுபவர்களை எல்லாம் பார்த்தால், இவர்கள் எல்லோருடைய பின்னணியிலும் உடைந்த குடும்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட மனைவிமார்கள் குடிபோதையில் குடும்பத்தை சீரழித்த தகப்பனார்கள் என்றுதானிருக்கும். அங்கிருந்து இந்தியாவிற்கு வருகின்ற அமெரிக்கர்கள் இந்தியர்களின் பாச மையமான குடும்ப வாழ்க்கையை கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். கணவன் வீடுகளுக்கு வரும்வரையிலும் காத்திருந்து, உணவு பரிமாறிவிட்டு, பிறகு தான் உண்ணும் மனைவி, தனக்கு பிடித்த subject-ஐ விட்டுவிட்டு தகப்பனர்ருக்குப் பிடித்த subject-ஐ எடுத்துக் கொள்ளும் மகன், சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் பெற்றோரிடம் கொடுத்துவிட்டு வெறும் ரூ.500, ரூ.1000 என்று தனது பாக்கெட் செலவிற்கு வைத்துக் கொள்ளும் மகள், உடம்பு முடியாமல் படுத்துவிட்ட பெற்றோருக்கு எல்லாவிதமான பணிவிடைகளையும் செய்து காலத்தைப் போக்கும் பிள்ளைகள் என்றிவைகளை எல்லாம் நேரில் பார்க்கும் அமெரிக்கர் இப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கை எப்படி சாத்தியம் இம்மாதிரி எங்கள் நாட்டில் அமைந்தால், எவ்வளவோ சிறப்பாக இருக்குமே என்று வியந்து பாராட்டுகிறார்கள். ஒருபக்கம் அதிக சுதந்திரத்தைக் கேட்கிறார்கள். மற்றொரு பக்கம் பாசமான குடும்ப வாழ்வை எதிர்பார்க்கிறார்கள். சுதந்திரத்தை ஓரளவு தியாகம் செய்தால்தான் குடும்ப வாழ்வு சிறக்கும் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. எந்த அமெரிக்கப் பெண்மணியும் கணவன் வீட்டிற்கு வருவது தாமதமானால், அவருக்காகக் காத்திருக்க முன்வருவதில்லை. தனக்கு பசி வந்தால், உடனே

சாப்பிடுவேன் என்ற அந்த சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காமல், பாசமான குடும்ப உறவுகள் வேண்டும் என்று கேட்டால், இக்கேள்வியே முரண்பாடாக அமைகிறது.

8. அமெரிக்க நாடு உலகில் நிலவும் பயங்கரவாதத்தை அழிக்க விரும்புகிறது. இருந்தாலும், அந்த நாட்டிலேயே நிலவும் துப்பாக்கிக் கலாச்சாரத்தைக்கூட கட்டுப்படுத்த முடியாமல் திணறுகிறது: உலக பயங்கரவாத்தை ஒழிக்க அமெரிக்கா எடுக்கும் முயற்சிகள் எப்படி இருக்கிறது என்றால், தன்னுடைய பிள்ளைகள் தறுதலையாக இருக்கும்போது அடுத்த வீட்டு பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்று புத்திமதி சொல்லும் குடும்பத் தலைவர்போல் உள்ளது. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகப்படுவதாகச் சொல்லிக்கொண்டு பத்து வருடங்களுக்கு முன்னால், அமெரிக்கா தாக்குதல் நடத்தி பெருவெற்றி பெற்றது. இருந்தாலும், பேரழிவிற்கான ஆயுதங்கள் அங்கே எதுவும் கண்டுபிடிக்கவில்லை. WTC Towers விமான தாக்குதலால் தகர்க்கப்பட்டபோது, அது ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருக்கும் அல்கொய்தா தீவிரவாதிகளின் வேலை என்று முடிவு செய்து பத்து வருடங்களாக பல்லாயிரம் கோடிகளை செலவு செய்து, ஆப்கானிஸ்தானில் நிலவும் தீவிரவாதத்தை ஒடுக்கியது. இவ்வளவு செலவு செய்தாலும், தீவிரவாத பீதியிலிருந்து, அமெரிக்கா விடுபட்டதாகத் தெரியவில்லை. இம்மாதிரியான நிலைமைக்கு தீர்வாக ஸ்ரீ கர்மயோகி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சொந்த நாட்டில் நிலவும் துப்பாக்கிக் கலாச்சாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தாலன்றி, அமெரிக்காவின் தீவிரவாத முயற்சி வெற்றிப் பெறாது என்கிறார்.

துப்பாக்கிக் கலாச்சாரம் ஏன் அங்கு நிலவுகிறது என்பதை நாம் முதலில் அறியவேண்டும். ஆரம்பத்தில் வனாந்திரமாக அமெரிக்கா இருந்தபோது அங்கு குடியேறியவர்கள் செவ்விந்தியர்களிடமிருந்தும், வனவிலங்குகளிடமிருந்தும் கொள்ளை முயற்சிகளில் ஈடுபடும் ரௌடிகளிடமிருந்தும் தங்களை காப்பாற்றிக் கொள்ள வனாந்திரத்தில், துப்பாக்கிகளை வைத்துக் கொண்டார்கள். வனாந்திரத்தில் போலீஸ் ஸ்டேஷன் நிறுவமுடியாது என்ற சிரமமும் இருந்தது. எனவே அரசாங்கமே பொதுமக்கள் தன்னுடைய உயிரையும், உடமையும் அவரவரே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கவும் செய்தது. ஆனால் அமெரிக்கக் கலாச்சாரம் நாகரீகமடைந்து, வனாந்திரங்கள் எல்லாம் மறைந்து சட்டம், ஒழுங்கு, போலீஸ் பாதுகாப்பு இவை எல்லாம் வந்தபிறகும் அமெரிக்க மக்கள் துப்பாக்கிக் கலாச்சாரத்தை விட மறுக்கிறார்கள். இந்த இடம்தான் புரியாத புதிராக உள்ளது, ஸ்ரீ கர்மயோகி அப்பா அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அமெரிக்கா நாகரீகமடைந்த நாடாகி விட்டபோதும், பழைய வனாந்திர பழக்கவழக்கங்களை அவர்களால் விட முடியவில்லை. அவர்களுக்குக் காவல் துறை மேலோ, சட்டம் ஒழுங்கு மேலோ இன்னமும் நம்பிக்கை வரவில்லை. அவர்கள் நம்பிக்கை எல்லாம் அவர்கள் கையில் வைத்துள்ள துப்பாக்கி மேல்தான் உள்ளது என்கிறார். இப்படி துப்பாக்கிமேல் வைத்துள்ள நம்பிக்கையை அவர்கள் விடாமல், அங்கே நிலவும் வன்முறையையோ அல்லது வெளிநாடுகளிலிருந்து வரும் தீவிரவாத தாக்குதல்களையோ ஒழிக்க முடியாது என்கிறார்.

இருந்தாலும், அம்மக்கள் வன்முறையிலிருந்தும், தீவிரவாதத்திலிருந்தும் விடுதலை வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால் அமெரிக்க மக்களிடம்முள்ள உண்மை அமெரிக்க அரசிடமில்லை. அணுகுண்டுகள் ஆபத்தானவை, அவைகளை வைத்திருப்பது நல்லதல்ல என்று பொதுவாக அமெரிக்க மக்கள் நினைக்கலாம். ஆனால் அமெரிக்க அரசாங்கம் அணுகுண்டுகளை விடுவதாக இல்லை. மாறாக அணுகுண்டுகளை வைத்திருப்பதை பெருமையாக நினைக்கிறது. பேரழிவிற்கு வழி செய்யும் அணுகுண்டுகளை விடமாட்டேன் என்று சொல்லும் ஒரு நாடு எப்படி தன் நாட்டில் வன்முறை தலை எடுக்காமல் தடுக்க முடியும்? அணுகுண்டுகளை அழிக்காமல் வைத்திருபோம் என்று சொல்வதே தவறு. அந்த தவறை செய்கின்ற அமெரிக்க நாடு அதோடு நிற்காமல் அணு ஆயுதங்களை வைத்திருக்காத மற்ற நாடுகளை எல்லாம் மிரட்டி உங்களுக்கு

அணுசக்தி மின் நிலையம் வேண்டுமென்றால், அணுகுண்டு தயாரிக்க மாட்டோம் என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால்தான் நாங்கள் அணுசக்தி technology-யை கொடுப்போம் என்று கட்டாயப்படுத்துகிறது. இம்மாதிரி மிரட்டும்போது ஒரு போலித்தனம் வெளிப்படுகிறது. அதாவது நாங்கள் அணுகுண்டுகள் வைத்திருக்கலாம். ஆனால் நீங்கள் வைத்திருக்க கூடாது என்று சொல்வதுபோலுள்ளது. சில நாடுகள் வெளிப்படையாக இப்படி அமெரிக்க அரசாங்கத்தைக் கேள்விகள் கேட்கின்றன. உதாரணமாக ஈரான அணுகுண்டு தயாரித்ததை அமெரிக்கக் கண்டித்தபோது ஈரானிய அதிபர் இப்படித்தான் எதிர்கேள்விக் கேட்டார். அப்படிக் கேள்வி கேட்பது அமெரிக்காவிற்குப் பிடிக்கவில்லை எனும்போது இது அந்நாட்டினுடைய insincerity-யை காண்பிக்கிறது. Insincerity இந்த இடத்தில் மட்டும் வெளிப்பப்ட்டு அத்துடன் நின்றுவிடுவதில்லை. மற்றும் பல இடங்களிலும் வெளிப்படத்தான் செய்கிறது. உதாரணமாக அமெரிக்கா ஒரு ஜனநாயக குடியரசு. நியாயமாகப் பர்ர்த்தால், உலகின் மற்ற நாடுகளில் ஜனநாயக குடியரசு அமைய அமெரிக்கா ஆதரவு அளிக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா இதற்கு நேரெதிர் மாறான காரியத்தைத்தான் செய்கிறது. அமெரிக்காவிற்கு கம்யூனிசத்தை ஆதரிக்கும் நாடுகள் நேரெதிரிகளாவார்கள். ஆகவே கம்யூனிசம் நிலவும் நாடுகளில் எல்லாம் அவ்வாட்சியை கவிழ்க்க அமெரிக்கா முயற்சி எடுக்கும். கம்யூனிசத்தை கவிழ்க்கும் முயற்சியில் ராணுவ ஆட்சி வந்தாலும் பரவாயில்லை என்று அமெரிக்கா உள்ளது. ஜனநாயகத்தை ஆதரிக்கும் அமெரிக்கா போன்றதொரு நாடு மற்ற நாடுகளில் ராணுவ ஆட்சி வர உதவி செய்வது என்ன நியாயம்? நேருவும், இந்திராவும் நம் நாட்டின் பிரதமராக இருந்தபோது சோவியத் யூனியனுடன் இந்தியா நட்புறவு கொண்டிருந்தது. இது அமெரிக்காவிற்கு பிடிக்கவில்லை. இதன் காரணமாக 1965 லும் சரி 1971-லும் சரி இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே போர் வந்தபோது அமெரிக்கா வெளிப்படையாக, பாகிஸ்தானைத்தான் ஆதரித்தது. இம்மாதிரியே இஸ்ரேல் பாலஸ்தீனர்களின் உறவில் எப்போது பிரச்சினை வந்தாலும், இஸ்ரேல் செய்யும் தவறுகளை கண்டுகொள்ளாமல் பாலஸ்தீனர்கள்தான் தவறு செய்கிறார்கள் என்பதுபோல் ஐ. நா பொது சபையில் அமெரிக்கா பேசுகிறது. இதனால் பெரும் கோபமடைந்து அல்கொய்தா தீவிரவாதிகள் அமெரிக்காவினுள் நுழைந்து, விமானங்களை கடத்தி, உலக வர்த்தக மைய கட்டடங்கள் இரண்டை விமானங்களை வைத்தே மோதி தகர்த்து, அமெரிக்காவையே பயங்கரவாத பீதியில் ஆழ்த்தினார்கள. இப்படியாக, அமெரிக்காவில் அமைதி நிலவ வேண்டுமென்றால், அதற்கு எதிரான காரியங்களை அந்நாடே செய்து கொண்டுள்ளது என்பது அந்நாட்டின் அறிவின்மையை காட்டுகிறது. அதாவது மக்களை துப்பாக்கி வைத்துக் கொள்ள பரவலாக அனுமதிப்பது, அணு ஆயுதங்களை கைவிட மறுப்பது, கம்யுனிசத்தை அழிப்பதாக நினைத்துக் கொண்டு ராணுவ ஆட்சியை ஆதரிப்பது, அமைதி விரும்பும் நாடான இந்தியாவை கைவிட்டு, வன்முறையை விரும்பும் பாகிஸ்தானை ஆதரிப்பது, இஸ்ரேலின் குறைபாடுகளை கண்டுகொள்ளாமல், அந்நாட்டையே ஆதரித்து, மற்ற முஸ்லீம் நாடுகளின் பகையை சம்பாதிப்பது போன்ற காரியங்களில் தொடர்ந்து ஈடுபடும் வரையிலும் அமரிக்காவில் அமைதி நிலவுவது கடினம். என்று இந்த தவறுகளை எல்லாம் அந்த அரசு உணர்ந்து, கைவிட்டு மனம் மாறுகிறதோ அன்றிலிருந்துதான் அந்நாட்டிற்கு உண்மையாக பயங்கரவாதத்திலிருந்து விடுதலை கிடைக்கும். அமெரிக்க அரசு மாறுமா? மாறாதா என்று நாம் சொல்வதற்கில்லை. ஆனால் மாறினால் நல்லது என்பதை மட்டும் சொல்ல முடியும்.

----------------